சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள் :07.12.2024

பி.வா.சா.1 - செய்யது இப்ராகிம் S/oகாதர்மைதீன்

O.S No.359/2021 :

(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

நான் இந்த வழக்கில் 5ம் பிரதிவாதி ஆவேன். நான் இந்த வழக்கில் தன்னிச்சையாக எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றும், என் தாயாரான மரியம் பீவி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை ஏற்றுக்கொண்டுள்ளேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் எனது தரப்பில் 7 ஆவணங்களை குறியீடு செய்துள்ளேன். நான் BE Civil Engineering படித்துள்ளேன். எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிர்வழக்குரையில் 4வது பத்தியில் இஸ்லாமியர் சட்டத்தில் கூட்டுஉரிமைதாரர்கள் என்ற கோட்பாடு இல்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நாங்கள் தாக்கல் செய்திருக்கும்எதிர்வழக்குரையில் 7வது பத்தியில் 6ம் பிரதிவாதியின் கணவர் காதர்மைதீன் உயிருடன் இருந்த போது அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் குறித்து, வாதியும், 1ம் பிரதிவாதியும் பிரச்சினை செய்ததை தொடர்ந்து மேற்படி பிரச்சினையானது மேலூர், முகைதீன் ஆண்டவர் பள்ளிவாசல் ஜமாத்தார்கள் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது என்றும், அதன்படி ஜமாத் நிர்வாகிகள் முன்னிலையில் 30.05.1992ல் பஞ்சாயத்து நடந்தது என்றும், அதனடிப்படையில் 1,2 பிரதிவாதிகள் காதர்மைதீன் ஆகியோரிடையே ஒரு குடும்ப ஏற்பாடு ஏற்பட்டுவிட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி குடும்ப

ஏற்பாடு ஆனது வாதியுடன் ஏற்பட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. அதற்கு அடுத்த பாராவில் அதைபற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. குடும்ப ஏற்பாட்டில் வாதியின் பெயர் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. வாதியின் பெயர் எதிர்வழக்குரையில் 7வது பத்தியில் பலமுறை வந்துவிட்டது. 30.05.1992 அன்று வாதி மற்றும் 1, 2 பிரதிவாதிகள் மற்றும் என்னுடைய தந்தை காதர்மைதீனுக்கிடையே குடும்ப ஏற்பாடு ஏற்பட்டது. மேற்படி குடும்ப ஏற்பாடானது மேலூர், முகைதீன் ஆண்டவர் பள்ளிவாசல் ஜமாத்தார்கள் முன்னிலையில் ஏற்பட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 30.05.1992 அன்று குடும்ப ஏற்பாடு ஏற்பட்டுவிட்டது என்பது குறித்தோ, அல்லது அதனடிப்படையில் பாகம் ஏற்பட்டது என்பது குறித்தோ, மேலூர், முகைதீன் ஆண்டவர் பள்ளிவாசல் ஜமாத்தார்கள் தொடர்பான ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி மேலூர், முகைதீன் ஆண்டவர் பள்ளிவாசல் ஜமாத்தார்கள் பராமரிப்பு செய்யக்கூடிய ஆவணங்களை நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி குடும்ப ஏற்பாட்டில் 6ம் பிரதிவாதியான என்னுடைய தாயார் மரியம் பீவி கலந்து கொண்டாரா என்றால் அப்போது எனக்கு சிறிய வயது என்பதால் அதுபற்றி நினைவில்லை. என் தாயார் சார்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் குடும்ப ஏற்பாட்டில் அன்றைய தினம் 30.05.1992ல் பங்கு பெற்றதாக இல்லை என்றால் சரிதான். 30.05.1992 அன்று ஏற்பட்ட ஏற்பாட்டின் அடிப்படையில் 1992ம் ஆண்டு வாதி, 1,2 பிரதிவாதிகள் மற்றும் காதர்மைதீன் ஆகியோர் சொத்துக்களை பிரித்து அனுபவித்து வந்ததை காட்டக்கூடிய வருவாய்துறை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1995ல் தான் பாகபிரிவினை பத்திரம் எழுதுகிறார்கள். பி.சா.ஆ.5 பாகபிரிவினை பத்திரம் 03.06.1995 அன்று ஏற்பட்ட பத்திரம் தானா என்றால்

ஆம். பி.சா.ஆ.5 ஆவணம் பாகபிரிவினை பத்திரம் என்றால் சரிதான். மேற்படி பாகபிரிவினை பத்திரமானது பதிவு செய்யப்படாத பத்திரம் என்றால் சரிதான். பி.சா.ஆ.5 பாகபிரிவினை பத்திரத்தில் வாதி ராஜாமுகமது, 1,2 பிரதிவாதிகள் அவர்களுடைய தாய்வழி மூலமாக அவரது தந்தை மற்றும் தாயார் வழி சொத்துக்களும் அதில் உள்ளடங்கியுள்ளது என்றால் சரிதான் என்று சாட்சி குறிப்பிட்டுவிட்டு அது தன்னுடைய தந்தையுடைய சொத்து என்றும், அது அவரது தாய்வழி தந்தை வழி சொத்தா, அல்லது தாய்வழி தாயார் மூலமாக கிடைத்ததா என்பது பற்றி தெரியாது என்று குறிப்பிடுகிறார். பி.சா.ஆ.5 ஆவணத்தில் வாதி, 1, 2 பிரதிவாதிகள் ஆகியோருடைய தாய்வழி தந்தை மற்றும் தாய்வழி தாயார் மூலமாக உயில் மூலமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் கண்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.5 ஆவணம் ஏற்பட்ட பின்னர் தான் வழக்கு சொத்து என்னுடைய தந்தை காதர்மைதீனால் கிரையம் பெற்ற சொத்து என்று நான் குறிப்பிடுகிறேன் என்றால் சரிதான். பி.சா.ஆ.5 ஆவணத்தில் வழக்கு சொத்து பற்றி எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது. )

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2024.12.07 15:34:18 +0530

**Sub Judge**
**Melur**